# மாணவர்கள் இடை நிற்றலுக்கான காரணங்களும் தீர்வுகளும்

# Reasons and Solutions for Student Dropouts

***முனைவர் நா. குமாரி***
**உதவிப்பேராசிரியர்**
**அக்சிலியம் கல்லூரி, வேலூர்**

**Dr. N. Kumari**
*Assistant Professor of Tamil*
*Auxilium College, Vellore*

***ஆய்வின் நோக்கம்***

*இயற்கை தான் மிகச் சிறந்த ஆசிரியர் எனும் கல்வியாளர் கார்லைல் கூற்றை உற்று நோக்கும் அதே வேளையில் உண்மையில் பெற்றோர் ஒரு குழந்தைக்கு உறவுகளை அறிமுகம் செய்து வைக்க, ஆசிரியரே அந்த குழந்தைக்கு உலகத்தை அறிமுகம் செய்து வைக்கிறார்.*

*ஒவ்வொரு மாணவருக்கும் அடிப்படை கல்வியைப் பெற அனைத்து உரிமைகளும் உள்ள நிலையில் இடைநிற்றல் என்ற பெரும் தலைவலி எங்கிருந்து துவங்குகிறது? இதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *இடைநிற்றல், பால்வேற்றுமை, கட்டுப்பாடு, எதிர்மறைத் தாக்கம், வருகை.*

**Abstract**

*Educator Carlyle observes that nature is the best teacher, while in fact parents introduce relationships to a child, while the teacher introduces the world to the child.*

*Where does the huge headache of dropout begin when every student has every right to basic education? The purpose of this article is to explore this.*

***Keywords:*** *Discontinuance, Heterogeneity, Control, Positive Affect, Attendance.*

**Citation**

Kumari, N. “Reasons and Solutions for Students Dropouts.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 36–39.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095855*

**முன்னுரை**

*பள்ளிக்கூட படிப்பை தொடராமல் பாதியிலே விட்டுவிடும் இடைநிற்றல் எனும் இடர்பாடு தொடர்கிறது. அதிலும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரின் தொடர் கற்றல் பல்வேறு சமூக பொருளாதார கலாச்சார காரணங்களால் இடர்பாடுகளுக்கு உள்ளாகிறது. மேலோட்டமாக பார்க்கும் போது இடைநிற்றல் என்பது பொதுவாக இருப்பினும் மாணவர்கள் மாணவிகள் என பால் வேற்றுமைபடுத்தி உற்று நோக்கும் போது இருவருக்குமான காரணங்கள் பல்வேறாக பல கிளைகளாக பரவிக்கிடக்கின்றன.*

*அதிலும் இடைநிற்றல் என்பது தனியார் பள்ளியிலா அரசு பள்ளியிலா என்பதையும் இங்கு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தனியார் பள்ளிகளில் இடைநிற்கும் மாணவர்களுக்கு பெரும்பாலும் இரண்டே காரணங்கள் தான். ஒன்று பள்ளிக் கட்டணத் தொகை அதிகம் எனும் காரணம். மற்றொன்று பணம் செலவழிக்க தயாராய் இருந்தும் அந்தப் பிள்ளை படிப்பில் ஆர்வம் காட்டாது இருப்பது. இரண்டாமதில் பள்ளி நிர்வாகமே அந்த பிள்ளையை தம் பள்ளியை விட்டு தாமே வெளியேற்றுகிறது. இது கொடுமையிலும் கொடுமை.*

*தற்போது* EMIS *பயன்பாடு உள்ளதால் ஒரு பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவ மாணவிகள் வேறு எந்தப் பள்ளியிலேனும் சேர்ந்துள்ளனரா அல்லது இடை நின்றனரா என்பதை சுலபமாக தெரிந்து கண்காணிக்க முடியும்.*

*பொதுவாகவே இவ்விரண்டிலுமிருந்தும் வெளியேறும் குழந்தைகளுக்கு உதவும் கரங்களாய் ஆதரிப்பது அரசுப் பள்ளிகள் தான். இவ்விரு காரணங்களுக்காக தனியார் பள்ளிகளிலிருந்து வெளியேறும் குழந்தைகளுக்கு அடைக்கலமாக இருப்பது அரசு பள்ளிகள் தான் அல்லது புதிதாக துவங்கப்படும் ஏதோவொரு தனியார் பள்ளி.*

*தற்போது அரசு பள்ளிகளுக்கு வருவோம். ஒரு மாணவன் பள்ளிப்பருவத்தில் இடை நிற்கிறான் எனில் வயதுக்கு தகுந்தாற் போல் காரணங்களும் இங்கு மாறுபடுகிறது.*

*6 - 10 வயதுகளின் இடையே ஒரு குழந்தை இடைநின்றால் பெற்றோர்களின் அலட்சியமே முழு காரணமாக இருக்கக்கூடும். பள்ளியை நோக்கி தம் பிள்ளைகளுக்கு ஆர்வம் ஏற்படுத்தாமையே முதற்காரணம். இடை நிற்றல் 11 - 15 வயதுகளின் இடையே நிகழ்ந்தால் உடன் படிக்கும் மாணவர்களின் மேல் இருக்கும் எதிர்மறை தாக்கம், ஆசிரியர்களை பிடிக்காது போதல், படிக்க பொறுமை இல்லாது போதல், எப்போதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கிடக்க அவர்களது மனம் ஒன்றாது இருத்தல், கவனமின்மை மற்றும் படிப்பில் ஆர்வமின்மை.*

*16 - 18 வயதுகளில் இடைநிற்றல் தற்போது பரவலாக நிகழ்கிறது. ஏனெனில் இந்த வயதுகளில் அவர்கள் 10,11,12 ம் வகுப்பு பயில்கிறார்கள். ஏற்கனவே படிப்பில் மிக சுமாராக இருக்கும் மாணவர்கள் பொதுத் தேர்வை எதிர்கொள்ளும் போது பெரும் பதற்றத்துக்கு உள்ளாகுகிறார்கள். அவர்கள் தேர்ச்சி பெற வேண்டி ஆசிரியர்கள் கொடுக்கும் அழுத்தம் மிக முக்கியம். பின் தன் பெற்றோர் இந்த சமூகம் என அத்தனையும் வரிசையாக அவனுக்கு அச்சுறுத்தலாகவே அமையுமானால் அந்த மாணவன் தீர்மானமாக அந்த முடிவையே எடுக்கிறான்.*

*இது தவிர்த்து குடும்ப வறுமையும் இடைநிற்றலுக்கான முக்கிய பங்கு வகிக்கிறது. அரசு பள்ளிகளில் படிக்க பெரும் பணம் தேவையில்லை தான். ஆனால் குடும்பச் சுமை தன் தோள் மீது விழுகையில் அதை எதிர்கொள்ள வேலை எனும் ஆயுதத்தை அவர்கள் கையில் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.*

*போதைக்கு அடிமையான பெற்றோர்களினால் குடும்ப அமைப்பே சிதைந்து சின்னா பின்னமாகி விடுவதால் அவர்கள் மீளவே வழியில்லாமல் போய் விடுகிறது. இதில் டிஸ்லெக்சியா எனும் கற்றல் குறைபாடும் சேர்ந்து கொள்கிறது.*

*படிப்பதில் எழுதுவதில் சிரமம், ஒரு வார்த்தையை வேறொன்றாகப் புரிந்து கொள்ளுதல், வரிவடிவத்தை அடையாளம் காண்பதில் சிக்கல், நினைவில் வைத்துக் கொள்ளாமல் திணறுதல் போன்ற, கற்றலின் குறைபாட்டை டிஸ்லெக்சியா என்பர். கடுங்குற்றங்கள் புரியும் குற்றவாளிகளை ஆராய்ந்த போது அதில் 70 விழுக்காட்டினர் வரை டிஸ்லெக்சியா உடையவர்களாக இருக்கின்றனர். ஐந்தில் ஒரு பிள்ளைக்கு வாசித்தலில் குறைபாடு உள்ளது என்பது உலக அளவில் டிச்லெக்சியா அமைப்புகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இந்த குறைபாட்டினாலும் இடைநிற்றல் நிகழ்கிறது. இதற்கென சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் நிச்சயம் இக்குறைப்பாட்டை களைய முடியும்.*

*இப்போது பெண் பிள்ளைகளுக்கு வருவோம். ஆணும் பெண்ணும் கொண்ட ஒரு குடும்பத்தில் இன்னமும் ஆணுக்கு சிறந்த இடத்திலும் பெண்ணுக்கு அதனிலும் சற்றே பின்தங்கிய நிலையில் கல்வி கிடைத்தாலும் பரவாயில்லை என ஏற்றுக் கொள்ளும் நிலையே இன்றளவும் நீடிக்கிறது.*

*ஆண் பிள்ளை தான் எங்களை இறுதி வரை உடனிருந்து பார்த்து கஞ்சி ஊற்றக் கூடியவர்கள். பெண் பிள்ளைகள் இன்னொரு வீட்டுக்கு திருமணமாகி போகப் போகிறவர்கள் தானே. புகுந்த வீட்டிற்கு உழைத்துக் கொட்ட நாங்கள் ஏன் படிக்க வைக்க வேண்டும் எனும் போக்கு படிக்க வரும் முதல் தலைமுறை குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் கல்வியின் வாசனையை நுகராத பெற்றோர்களுக்குள்ளும் குவிந்து கிடக்கிறது. இந்த நிலை மாறினால் நிச்சயம் சமுகத்தில் அற்புத மாயங்கள் நிகழும்.*

*அடுத்து, பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழலில் பெண் குழந்தைகளை வீட்டு வேலையை மேற்கொள்ளச் சொல்லி பள்ளிக்கே தலைமுழுக்கு போடுகின்றனர்.*

*இப்படித்தான் என் வகுப்பில் படித்த மாணவி ஒருவள், வாரத்தில் நான்கு நாட்கள் விடுப்பு எடுத்து ஒரு நாள் மட்டுமே வருகை புரிவாள். அவளை அழைத்து விசாரித்ததில் முதலில் உடல் நலம் சரியில்லை என்று சொன்னவள் பின் உண்மையை ஒப்பித்தாள். அவளுடைய அக்காவுக்கு குழந்தை பிறந்திருப்பதாகவும் தன் தாய் வேலைக்குச் செல்வதால் அக்காவையும் குழந்தையையும் பார்த்துக் கொள்ள தன்னை விடுப்பு எடுக்கச் சொல்கின்றனர் என்று அழுதாள். பின் பெற்றோரை அழைத்து பேசி அவள் பிரச்சனைக்கு முடிவு கண்டோம்.*

*மற்றொரு மாணவி சுதாவின் வருகையும் குறைந்து ஒரு கட்டத்தில் முற்றாக நின்று விட அவளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிறகு தன் வீட்டின் அருகாமையில் வசிக்கும் மற்றொரு மாணவியிடம் ஒரு கடிதத்தை எழுதி என்னிடம் சேர்ப்பிக்குமாறு செய்திருந்தாள். அதில் தன் தாய் வேறொருவருடன் வாழ வேண்டி தங்கள் குடும்பத்தை விட்டே விலகிச் சென்று விட்டதாகவும் அதன் பொருட்டு ஏற்பட்ட அவமானத்தால் தந்தை உயிரை போக்கிக் கொள்ள முனைந்து பின் காப்பாற்றப்பட்டு தற்போது பெரும் மனப்போராட்டத்தில் உழன்றுக் கொண்டிருப்பதாகவும் எழுதியிருந்தாள். எனக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. பின் அவளை அழைத்துப் பேசி பள்ளிக்கு வரவழைத்து தைரியம் கொடுத்து பத்தாம் வகுப்பை தேர்ச்சி பெறச் செய்தோம். தற்போது கல்லூரி படிக்கிறாள்.*

*இந்த திருவண்ணாமலை மாவட்டத்தை பொருத்தவரை எண்ணற்ற இளம் வயதினர் வெளி மாவட்டங்களுக்கு வேலை தேடி சென்று விடுகின்றனர். அவர்களின் பிள்ளைகள் இங்கு அவர்தம் பெற்றோரிடம் தங்கி படிக்கின்றனர். கல்வியற்ற அந்த வயதான முதியவர்களுக்கு இவர்களை சரியாக வழி நடத்த முடியா சூழ்நிலையில் பிள்ளைகள் அதிகமாக இடை நிற்கிறார்கள்.*

*நெருக்கடியான குடும்ப சூழ்நிலைகள் காரணமாகவும் வயதுக் கோளாறினாலும் மாணவ மாணவிகள் எளிதில் காதல் வயப்பட்டு திருமணத்திற்கு உரிய வயதை எட்டும் முன்னரே முறையின்றி ஊரை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொள்கின்றனர். இதன் மூலமும் அவர்கள் இடைநிற்கிறார்கள். பள்ளிகளில் ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மட்டுமே இதிலிருந்து மீளலாம்.*

*இது போன்ற பலப்பல பிரச்சனைகளுக்கு இடையே தான் அரசு பள்ளி மாணவ மாணவிகள் பள்ளிகளுக்குள் காலடி எடுத்து வைக்கிறார்கள். அதை முதலில் ஆசிரியர்கள் உணர வேண்டும். அப்படி உணர்ந்தாலே கற்றல் கற்பித்தல் சுலபமாகிவிடும். அவர்களின் தேவைக்கேற்ப சூழ்நிலைக்கேற்ப அவ்வப்போது நாம் சிறந்த வழிகாட்டியாக இருக்க முடியும்.*

*மாணவர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் இருவரும் இரு கைகள் போன்றவர்கள். இதில் ஒருவர் மட்டும் எவ்வளவு வேகமாக விசிறினாலும் செயல்பட்டாலும் ஓசை வராது. இரு கைகளும் ஒன்றாக சேர்த்து தட்டப்படும் போது தான் ஓசை வரும். அது போல் மாணவர் நலன் கருதி இருவரும் இணைந்து செயல்படும் போது வெற்றி உறுதி.*

**முடிவுரை**

***ஓ ஆசிரியரே***
***நீங்கள் ஓடினால், மாணவன் நடப்பான்***
***நீங்கள் நடந்தால், மாணவன் நிற்பான்***
***நீங்கள் நின்றால், மாணவன் உட்காருவான்***
***நீங்கள் உட்கார்ந்தால், மாணவன் தூங்குவான்***
***நீங்கள் தூங்கினால், மாணவன் இறப்பான்***

*செப்டம்பர் ஐந்தில் ஆசிரியர் தினத்தை நாம் எல்லோரும் கொண்டாட காரணமான டாக்டர். சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் இவ்வாறு கூறியிருக்கிறார். ஆக மாணவர்களின் நலனில் பெற்றோர்களை விட ஆசிரியர்களின் கை ஓங்கும் போது தான் அவர்களின் எதிர்காலம் மிக மிகச் சிறப்பாக அமையும்.*

*அனைவருக்கும் கல்வி என்பதில் அரசும், ஆசிரியர்கள் சமூகமும், கிராம குழுக்களும் முழு மனதுடன் ஈடுபாடு காட்டினால் தான் இடைநிற்றல் என்பது படிப்படியாக குறைந்து பிறகு அறவே நீங்கும்.*

**துணை நூற்பட்டியல்**

1. *குமரன், எஸ். கற்றல் கற்பித்தலில் புதிய சிந்தனைகள், கலைஞன் பதிப்பகம், சென்னை - 2011*
2. *திருக்குறள், கழக வெளியீடு சென்னை.*
3. *சர்வ பள்ளி ராதாகிருஷ்ணன், பாரதி புத்தகாலயம், சென்னை-2000*